# மறுபிறப்பு என்றால் என்ன?

**What is Rebirth?**

***R. ஸ்டான்லியின் ஒரு வேதபாடக் குறிப்பு***

*முகவுரை*

- யோவான் 3:1-3 ... *ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் ...*
  *''மறுபிறப்பு''* — இன்று அதிகமாய்ப் பேசப்படுவது
- இந்து மதம் போதிக்கும் ''மறுபிறவி'' என்பதல்ல —
  இன்று இவ்வுலகிலேயே அனுபவிக்க வேண்டியது (வச 12).

***மறுபடி பிறக்கும்போது நிகழ்வது —***

***1. பிசாசின் பிள்ளைகள் கடவுளது பிள்ளைகளாகின்றனர்.***

கிறிஸ்துவைப் புறக்கணிப்பவன் பிசாசினால் உண்டானவன் (யோ 8:42,44அ).
யோ 1:12 ... *தேவனுடைய பிள்ளைகளாகும்படி ...*
கடவுளுக்குப் பிள்ளைகள்தான் உண்டு, பேரப்பிள்ளைகளல்ல.
படைப்பினால் தேவனோடிருந்த உறவு.
ஆதாமின் மீறுதல் (ரோ 5:14,15,18).
பாவிக்குப் பதிலாகக் கிறிஸ்துவின் இறப்பு.

மறுபடி பிறப்பது என்றால் கிறிஸ்துவை நமது பாவங்களைச் சுமப்பவராகவும் நமது இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளுதலாகும்.

***2. இருளின் பிள்ளைகள் ஒளியின் பிள்ளைகளாகின்றனர்.***

எபே 5:8-11 ... *இருளின் செயல்கள் ... ஆவியின் கனி*
ஊனியல்பின் செயல்பாடுகளை வெறுத்தல் (கலா 5:19-21)
— *விபச்சாரம்* ... துராசையான பார்வை
— *சிலை வணக்கம்* ... கடவுளைவிட அதிகம் நேசிக்கப்படுவது
— *கொலை* ... இருதயத்தில் பகை

தங்கள் செயல்பாடுகள் தீயவையாயிருப்பதால் மனிதர் ஒளியைவிட இருளை விரும்புகின்றனர். கிறிஸ்துவாகிய ஒளியிடம் வாருங்கள் — (யோ 3:19-21)

பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுதல் (1 யோ 1:7-9).
வரிக்காரனது ஜெபம்: — *''தேவனே, பாவியாகிய என்மீது கிருபையாயிரும்!''*
*தேவனால் பிறந்தவன் பாவம் செய்துகொண்டிருக்கமாட்டான்* (1 யோ 3:8,9)
அதாவது, வழக்கமாகவே பாவம் செய்யமாட்டான் —
எ.கா.) ஆட்டுக்குட்டி vs. பன்றி

மறுபடி பிறப்பது என்றால்
பாவத்தை வெறுத்து, சோதனைக்கு மறுப்பு தெரிவிப்பதாகும்.

***3. ஊனியல்பின் பிள்ளைகள் திருவாக்கின் பிள்ளைகளாகின்றனர்.***

ரோ 9:6-8,30-32; 10:3,4 } இஸ்மவேல் vs. ஈசாக்கு

மார்க்கச் சடங்குகள், தானதர்மச் செயல்கள், முதலியன
எ.கா.) பவுல் (பிலி 3:4-9)
கொர்நேலியு (அப் 10:1,2)
பரிசேயன் (லூக் 18:11,12)

*நமது நீதிவாழ்வு ... அழுக்கான கந்தை* (ஏசா 64:6)
மதமே பாவம்தான்: கடவுளை மனிதன் தேடுவது
பைபிள் போதிப்பது: மனிதனைக் கடவுள் தேடுவது

-- 2

*''ஆபிரகாம் எங்களது தந்தை''* என்று சொல்லாதீர் (மத் 3:9)

இரட்சிப்பு நற்செயல்களாலல்ல, கிருபையினாலானது (எபே 2:8.9)

செய், செய் என்பதல்ல, செய்தாயிற்று!

எ.கா.) நம்மை நாமே தூக்கமுடியுமா?

மறுபடி பிறப்பது என்றால் நமது நற்செயல்களையல்ல,
தேவ கிருபையையும், கிறிஸ்துவின் நீதியையுமே சார்ந்திருத்தலாகும்.

***4. <u>கீழ்ப்படியாமையின்</u> பிள்ளைகள் <u>கீழ்ப்படிதலின்</u> பிள்ளைகளாகின்றனர்.***

1 பேது 1:13-16 ... *முந்திய துராசைகள்* vs. *பரிசுத்தம்*
கொலோ 3:6,7 ... *தேவ கோபம் ... கீழ்ப்படியாமை*

ஆதாமிலிருந்து நமக்கு வந்த முரட்டாட்டமும் எதிர்ப்புமுள்ள சுபாவம்.

இப்பொழுதோ தேவனையே பிரியப்படுத்த விருப்பம்.
இது அன்பின் வெளிப்பாடு (1 யோ 5:3) ... *பாரமானவையல்ல*

கடவுள் கடினமான எஜமான் என்று முறையிடுவதில்லை!

இயேசுவின் அழைப்பு: *''எனது நுகம் எடுங்கள் ...*
*''என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் ...*
*''நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்''* (மத் 11:28.29)

அதாவது, இறைச்சித்தத்திற்கு இசைந்து செல்லும் வாழ்வு.

மறுபடி பிறப்பது என்றால்
இளகிய மனதும் கீழ்ப்படியும் மனப்பான்மையும் பெறுதலாகும்.
எ.கா.) பவுல் — *''நான் என்ன செய்வது உமது சித்தம், தேவா?''*

***5. <u>நரகத்தின்</u> பிள்ளைகள் <u>இறையரசின்</u> பிள்ளைகளாகின்றனர்.***

மத் 13:38-40,43

விண்ணகச் சிந்தை கொள்ளுதல் (செல்வந்தன் vs. லாசரு)

குடியுரிமை விண்ணகத்தில்.

எல்லாம் மாயை எனப் புரிதல்.

இறைமக்களின் நட்புறவு (1 யோ 5:1,2; 3:14).

வாழ்வின் அடிப்படை நோக்கிலேயே மாற்றம்.

*(மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் ...* மாற் 8:36 ... செல்வந்தன்)

வெற்றி நிச்சயம், வெல்லும் மனப்பான்மை!

மறுபடி பிறப்பது என்றால்
விண்ணரசு வருவதற்காய்க் காத்திருந்து வாழ்தலாகும்.

***மறுபடியும் பிறப்பது எப்படி?***

உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள் (லூக் 24:47).
கிறிஸ்துவை உங்கள் ஆண்டவரும் இரட்சகருமாய்
ஏற்றுக்கொள்ளுங்கள் (அப் 16:31).

***முடிவுரை***

ஒருமுறைதான் பிறந்தால், இருமுறை இறப்பு;
இருமுறை பிறந்தால், ஒருமுறைதான் இறப்பு!

வெளி 20:14; 21:8

---

*(ஆசிரியரின் **பைபிள் முத்துக்கள்** எனும் 1200-பக்க நூலின் 200 வேதபாடக் குறிப்புகளில் இது ஒன்று.)*